உறுப்பினர்களை சந்திருக்கிறார்கள். டில்லியில் சென்ட்ரல் ஹால் இருக்கிறது. அங்கே அமைச்சர்களும் உறுப்பினர்களும் சந்திக்கக்கூடிய அந்த வாய்ப்பு எல்லாம் இருக்கிறது. ஆனால் நமக்கு அப்படிப் போதுமான வாய்ப்பு வசதிகள் உள்ள இடமாக நாம் கூடுகின்ற இந்த இடம் அமையவில்லை. இருந்தபோதிலும் வெளியிலே அமைச்சர்கள் வருவதும், உறுப்பினர்களோடு சகஜமாகப் பழகுவதும் இருக்க வேண்டிய ஒன்றாகும். அப்படி சந்திக்கின்ற இடத்தில் அவர்களிடத்தில் தருகிறோம். என்னைப் பொறுத்தவரையில், நான் இங்கு இருப்பேன். இல்லாவிட்டால் அங்கிருக்கின்ற மண்டபத்தில் இருப்பேன். அங்கே என்னிடத்தில் கொண்டு வந்து தரலாம். இங்கே தரும்போது கூட கொடுத்துவிட்டுப் போய்விட வேண்டும். அங்கே வந்தால் இரண்டு நிமிடங்கள் பேசிவிட்டுக் கூடச் செல்லலாம். எனவே அறவே கொடுக்கக் கூடாது என்று இல்லாமல் தாங்கள் இன்று எடுத்த முடிவின் காரணமாக ஓரளவு இதிலே ஒரு கட்டுப்பாடு ஏற்படும் என்று நான் நம்புகிறேன்.

8. கவன ஈர்ப்பு

(அ) மாதவரத்தில் சில பகுதிகளை வீட்டுவசதி வாரியம் கையகப்படுத்துவதால் அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதிப்பு.

திரு. டி. கே. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை மாதவரத்தில் சில பகுதிகளைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கையகப்படுத்தும் திட்டத்தினால், அப்பகுதிகளில் வீடுகட்டி நீண்டகாலம் வாழ்ந்துவரும் மக்களின் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

மாதவரம் கிராமத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்ட நிலப்பகுதி தொழிற் பேட்டையை ஒட்டியிருப்பதுடன் நெல்லூர் நெடுஞ்சாலை மற்றும் உள்வட்டச்சாலை (Inner Ring Road) ஆகியவற்றுடன் இணைக்கப்பெற்றுள்ளதாலும், உலக வங்கிக் குழு சென்னையில் உள்வட்டச் சாலையினை ஒட்டியுள்ள நிலப்பகுதியினை கையகப் படுத்துவதற்காக சாத்தியக் கூறுகளை ஆராயுமாறு பரிந்துரை செய்ததின் பேரிலும், இப்பகுதியில் உள்ள நிலங்களை கையகப் படுத்த உத்தேசிக்கப்பட்டது.

இப்பகுதியினை சமீப காலத்தில் பார்வையிட்டபோது, நகரத் திட்ட அமைப்புத் துறையின் ஒப்புதல் பெற்ற அல்லது பெறாத குடியிருப்புப் பகுதிகள் (லே-அவுட்ஸ்) ஆங்காங்கே உருவாகியுள்ளதையும், மேலும் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதி விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருவதையும், கண்ணுற்ற தால் திருத்தியமைக்கப்பட்ட செயற்குறிப்பு ஒன்றினைத் தயார் செய்யும் பொருட்டு, இப்பகுதியிலுள்ள நிலங்களின் தற் போதைய நிலையினை அறிந்து அறிக்கை ஒன்றினை அனுப்பு மாறு இப்பகுதிக்கான நில எடுப்பு அலுவலர் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார். அவருடைய அறிக்கைக்கு பின் திருத்தியமைக் கப்பட்ட நில எடுப்பு செயற்குறிப்பின் மீது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் முடிவு செய்யவுள்ளது.

11-05 மணி

திரு. டி. கே. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தொகுதியில் அடங்கியுள்ள மாதவரத்தில் நில சர்வே எண்கள் 1227/2ஏ, 1227/2பி மற்றும் 1222, 1223, 1224, 1225 ஆகியவற்றிலுள்ள பிரகாஷ் நகர், தணிகாசலம் நகர், லட்சுமி நகர், சஞ்சய் நகர், அய்யப்பன் நகர், வி. பி. சி நகர் ராமச்சந்திர நகர், அன்னை சத்தியா நகர் போன்ற பகுதிகளில் ஏழை எளிய தொழிலாளர்கள் குறிப்பாக இரயில்வேத் தொழிலாளர்கள், பின்னி தொழிற்சாலை தொழிலாளர்கள், தமிழக அரசு தொழிலாளர்கள், சிம்சன் தொழிலாளர்கள் போன்றவர்கள் எல்லாம் நீண்ட காலமாக வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல லே—அவுட் அப்ரூவ் ஆன இடம் அப்ரூவ் அல்லாத இடங்களில் எல்லாம் வீடு கட்டி நீண்டகாலமாக வாழ்ந்து வருவதை அனைவரும் அறிவர். அந்த இடத்திலே இந்த ஆக்கிரமிப்பு செய்யப்படுமானால் அந்த ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். அந்த நிலைமையை அரசு ஆராய்ந்து ரத்து செய்து அவர்களுக்கே அந்த நிலத்தை, அவர்கள் கட்டியுள்ள வீடுகளில் வாழ்ந்து வருவதற்கான வசதிகளை அமைச்சர் அவர்கள் செய்துகொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போதைய சூழ்நிலையை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அந்தச் சூழ் நிலையைக் கருத்தில் கொண்டு வீட்டுவசதித் துறை அதிகாரி களும், வருவாய்த் துறை அதிகாரிகளும் மீண்டும் ஒரு தடவை அந்த இடங்களையெல்லாம் பார்வையிட்டு அரசுக்கு அறிக்கை அளித்ததற்குப் பிறகு இது பற்றி இறுதி முடிவு எடுக்கலாம்,

[1990 ஏப்ரல் 21

திரு. டி. கே. பழனிச்சாமி: அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மேலும் ஏழை எளிய பாட்டாளி மக்கள் கலைஞர் அரசால் காப்பாற்றப்படவேண்டும் என்ற நல்ல எண்ணத்தைக் கொண்ட உழைக்கின்ற வர்க்கத்தைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் உன்னிப்பாக கவனித்து ஆவன செய்ய வேண்டு மென்று அன்போடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

(ஆ) ஆதி திராவிடர் நலத்துறைப் பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளது குறித்து.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட மாட்டார்கள் என்ற உறுதிமொழியை மீறி, ஆதிதிராவிடர் நலத்துறைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப் பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

ஒப்பந்த அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்யும் முறை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் நடைமுறையில் இருந்து வருகிறது. இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் 1986 முதல், கல்வியாண்டில் கடைசி தேதியில் பணி நீக்கம் செய்யப்பட்டு, விடுமுறை காலத்திற்குப் பின் மீண்டும் பணியி லமர்த்தப்படுகின்றனர். 181 பட்டதாரி ஆசிரியர்கள் இத்துறை யில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேற்படி ஆசிரியர்கள் கல்வித்துறையில் அரசு "ஆசிரியர் நிய மனக்குழு" அமைத்துள்ளது என்றும், கல்வித்துறையில் உள்ள இவர்களைப் போன்ற ஆசிரியர்களின் பணி, வரன்முறைப்படுத் தப்படுகிறது என்றும், எனவே, தங்கள் பணியும் பணியிலமர்த் தப்பட்ட முதல் தேதியிலிருந்து வரன்முறைப்படுத்தப்பட வேண் டும் என்றும் கோரி வருகின்றனர். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களின் பணியிடம் தேர்வாணையத்தின் ஆளுகையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. எனவே, தேர்வாணையம் தேவையான பணியாளர்களைத் தெரிவு செய்து இத்துறைக்கு அனுப்ப வேண் டும். தற்போது 1989-90 கல்வியாண்டு முடிவடையும் தருவா யில் உள்ளதால், இத்துறையில் ஒப்பந்த அடிப்படையில் பணியி